**கூடலூர் நகராட்சி (நீலகிரி)**

**30.01.2018–ம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின்**

**சாதாரண கூட்டத்தின் பொருட்கள்.**

1) நீலகிரி மாவட்டத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் 24.11.2017 அன்று வணிகர்களுடனான ஆலோசனை கூட்டத்தில் கீழ்கண்ட பிளாஸ்டிக் பொருட்களை நீலகிரி மாவட்டத்தில் 15.01.2018 முதல் தடை செய்வது என முடிவு செய்யப்பட்டது.

1. Plastic carry bags of all thickness
2. Plastic cups
3. Plastic tumblers
4. Plastic spoons, forks and knives
5. Plastic straws
6. Paper cups
7. Paper tumblers
8. Plastic and foil lined paper plates
9. Styrofoam/Thermocol plates and cups, Loose Thermocol/cutouts
10. No more free bags to be given in shops, charge for every cloth bag given
11. Nonwoven packing bags, bed sheets, chefs hats, caps
12. Plastic gloves
13. Water Packets
14. Silver foil covers
15. Plastic buntings
16. Plastic and foil gift wrap
17. Cling wrap
18. Plastic banana leaf

12.01.2018 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் Non woven Carry bags இனத்திற்கு மட்டும் 15.03.2018 வரை தடைக்கு விலக்கு அளிக்கவும், மருத்துவ சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடையிலிருந்து விலக்கு அளிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கண்ட பொருட்களுக்கு தடைவிதிக்க மன்ற அனுமதி கோரலாம்.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

2) இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு டிராக்டர் வாகனம் TN 43 Y 0725 ற்கு தகுதி சான்று பெற வேண்டியுள்ளதால் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.46500/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

3) இந்நகராட்சிக்கு சொந்தமான திருவள்ளுவர் வணிக வளாகத்திலுள்ள கடை எண் 9 ற்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு அனுபவிக்க கடந்த 25.01.2018 அன்று காலை 11 மணிக்கு மறு ஏலம் கோரப்பட்டதில் கீழ்கண்ட நபர்கள் மறு ஏலம் கேட்டுள்ளனர்.

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஏலக்கேள்வி தொகை |
|---|---|---|
| 1 | திரு.கே.பிரசாத் குமார்<br>க.எண்.16/267 புத்தூர்வயல்<br>கூடலூர் 6432111 | ரூ.5400/–<br>(மாத வாடகை) |
| 2 | திரு.சி.பழனியப்பன்<br>க.எண்.10.20B1<br>சுங்கம் (மெயின் சாலை), 643212 | ரூ.5390/–<br>(மாத வாடகை) |

மேற்கண்ட இருவரின் ஏலத்தொகையில் வரிசை எண் 1 ல் கண்டுள்ள திரு.கே.பிரசாத் குமார், க.எண்.16/267, புத்தூர்வயல், கூடலூர் என்பவரின் ஏலக் கேள்வித் தொகை கூடுதலாக உள்ளது. இக்கடைக்கு 2017–18 ம் ஆண்டிற்கு மாத வாடகையாக ரூ.4522/– நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே தற்போதைய ஏலத்தாரரின் ஏலக்கேள்வி ரூ.5400/– 2017–18 ம் ஆண்டின் மாத வாடகையினை விட கூடுதலாக உள்ளதால் மன்றத்தின் முடிவிற்கு.

**அலுவலக குறிப்பு –** மேற்படி கடையின் உரிமையினை 01.02.2018 முதல் 31.01.2021 முடிய மூன்றாண்டுகளுக்கு அனுமதிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

4) இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் TN 43 Y 8303 ன் பின்பக்க டயர்கள் இரண்டினை ரீடிரேடிங் செய்வதற்காக நகர் மன்ற தீர்மான எண்.179 நாள் 28.09.2017 ன்படி வழங்கப்பட்ட அனுமதியின் பேரில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | திருவாளர்கள். டயரக்ஸ் கூடலூர் | 4800.00 |
| 2 | திருவாளர்ள். பாப்புலர் டயர்ஸ், கூடலூர் | 5500.00 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய திருவாளர்கள். டயரக்ஸ் கூடலூர் நிறுவன விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

5) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவுகளை தரம் பிரித்து வழங்க பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நீலமலை தொலைக்காட்சியில் விளம்பரம் செய்ததற்கான தொகை ரூ.6000/– ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

6) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவுகளை தரம் பிரித்து வழங்க பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ATN தொலைக்காட்சியில் விளம்பரம் செய்ததற்கான தொகை ரூ.6000/– ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

7) இந்நகராட்சி பகுதிகளில் உள்ள வீடுகளின் கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை அழித்தல்,திடக்கழிவுகளை பெறுதல் ஆகிய பணிகளுக்காக ஒரு பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.534/– மற்றும் நிர்ணய கட்டணம் ரூ.10ரூ வீதம் (ரூ.587.40) 40 தனியார் துப்புரவு பணியாளர்களை நியமிக்க ஆகும் தொகை ரூ.4446424/– (ரூபாய் நான்கு இலட்சத்து நாற்பத்தி ஆறாயிரத்து நாநூற்றி இருபத்தி நான்கு மட்டும்) வழங்கியமைக்கு மன்றத்தின் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

8) கூடலூர் நகராட்சியில் தினமும் சேகரிக்கும் குப்பைகளை தரம் பிரித்து கொட்டுவதற்கு நகராட்சிக்கு சொந்தமாக 4.50 ஏக்கர் நிலம் பாடந்துரை கிராமம், செளுக்காடியில் உள்ள நிலத்தில் குப்பை கொட்டுவதற்கு பசுமை தீர்ப்பாயத்தில் (தெற்கு மண்டலம்) சென்னையில் திரு. மாதையன் என்பவர் தொடர்ந்த வழக்கு எண்.209/2015 ல் தடை உத்திரவு உள்ளதால் நகராட்சியில் சேகரிக்கும் குப்பைகளை கொட்டுவதற்கு 27 வது மைல் பகுதியில் தனியாருக்கு சொந்தமான 1.00 ஏக்கர் நிலம் மாத வாடகைக்கு மன்றத்தின் மூலம் தீர்மானம் நிறைவேற்றி தினந்தோறும் சேகரிக்கும் குப்பைகளை கொட்டி வந்த நிலையில் கே.கே. நகர் பகுதியை சேர்ந்த திரு. சுப்ரமணி என்பவர் சென்னை தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்தபடியால் சென்னை பசுமை தீர்ப்பாயம் வழக்கு எண்.86/2017 ன்படி தடை உத்திரவு பிறப்பித்துள்ளது. இந்நிலையில் பசுமை தீர்ப்பாயத்தில் நகராட்சி ஆணையாளர் வழக்கில் ஆஜரரகி 12.05.2017 அன்று பசுமை தீர்ப்பாயத்தில் தடை உத்திரவு நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 26.05.2017 ம் தேதிய விசாரணையில் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் கூடலூர் நகராட்சி ஆணையாளர் அவர்கள் சென்னை பசுமை தீர்ப்பாயத்தில் ஆஜராகினர். மேற்படி விசாரணையில் கூடலூர் நகராட்சி சேகரிக்கும் குப்பைகளை தரம் பிரித்து மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை தனித்தனியே கொட்டவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடித ந.க.எண்.20202/2017/இ1, எண்ணிட்ட 26.05.2017 ம் தேதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அறிவுரையின்படி இந்நகராட்சி பகுதிகளில் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்க இந்த இடத்தில் இரண்டு கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் குப்பைகள் அதிகமாக வருவதால் இப்பகுதியில் மூன்றாவது கொட்டகைக்கு File Foundation அமைக்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.10.00 இலட்சம் ஆகும். மேற்படி பணியை உடனடியாக செய்ய வேண்டியுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மூலம் பணியினை மேற்கொள்வதற்கும் மற்றும் தொகை வழங்ககுவதற்கும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (இலட்சம்) | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சியில் 27 வது மைல் பகுதியில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள குப்பை கிடங்கில் கொட்டகை –3 அமைத்தல். | 10.00 | M/s. ஹைலேண்ட் கன்ஸ்டிரக்ஷன்ஸ் |

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்

9) கூடலூர் நகராட்சியில் தினமும் சேகரிக்கும் குப்பைகளை தரம் பிரித்து கொட்டுவதற்கு நகராட்சிக்கு சொந்தமாக 4.50 ஏக்கர் நிலம் பாடந்துரை கிராமம், செளுக்காடியில் உள்ள நிலத்தில் குப்பை கொட்டுவதற்கு பசுமை தீர்ப்பாயத்தில் (தெற்கு மண்டலம்) சென்னையில் திரு. மாதையன் என்பவர் தொடர்ந்த வழக்கு எண்.209/2015 ல் தடை உத்திரவு உள்ளதால் நகராட்சியில் சேகரிக்கும் குப்பைகளை கொட்டுவதற்கு 27 வது மைல் பகுதியில் தனியாருக்கு சொந்தமான 1.00 ஏக்கர் நிலம் மாத வாடகைக்கு மன்றத்தின் மூலம் தீர்மானம் நிறைவேற்றி தினந்தோறும் சேகரிக்கும் குப்பைகளை கொட்டி வந்த நிலையில் கே.கே. நகர் பகுதியை சேர்ந்த திரு. சுப்ரமணி என்பவர் சென்னை தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்தபடியால் சென்னை பசுமை தீர்ப்பாயம் வழக்கு எண்.86/2017 ன்படி தடை உத்திரவு பிறப்பித்துள்ளது. இந்நிலையில் பசுமை தீர்ப்பாயத்தில் நகராட்சி ஆணையாளர் வழக்கில் ஆஜரரகி 12.05.2017 அன்று பசுமை தீர்ப்பாயத்தில் தடை உத்திரவு நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 26.05.2017 ம் தேதிய விசாரணையில் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் கூடலூர் நகராட்சி ஆணையாளர் அவர்கள் சென்னை பசுமை தீர்ப்பாயத்தில் ஆஜராகினர். மேற்படி விசாரணையில் கூடலூர் நகராட்சி சேகரிக்கும் குப்பைகளை தரம் பிரித்து மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை தனித்தனியே கொட்டவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடித ந.க.எண்.20202/2017/இ1, எண்ணிட்ட 26.05.2017 ம் தேதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அறிவுரையின்படி இந்நகராட்சி பகுதிகளில் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்க இந்த இடத்தில் இரண்டு கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் குப்பைகள் அதிகமாக வருவதால் இப்பகுதியில் மூன்றாவது கொட்டகைக்கு இரும்பு துான் மற்றும் மேற்கூரை அமைக்க தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – அனுமதி வழங்கலாம்.

10) இந்நகராட்சிக்குட்பட்ட காளம்புழா பகுதியில் உள்ள நவீன எரிவாயு தகனமேடையில் உள்ள இயந்திரங்களில் பழுதான Gasifier Pipe line,Burner Pipe line மாற்றி அமைக்கவும், Gasifier Unit முழுவதுமாக பழுதுபார்த்து கசியும் வாயுக்களை சரி செய்ய ஆகும் தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.120000/–ற்கு பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – அனுமதி வழங்கலாம்.

11) இந்நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை தினசரி சேகரிக்கப்பட்டு 27 வது மைல் பகுதியில் தனியாருக்கு சொந்தமான 1 ஏக்கர் நிலைப்பகுதியில் கொட்டப்பட்டு வருகிறது. திடக்கழிவுகளை கொட்ட போதுமான இட வசதி இல்லாத காரணத்தால் சேகரிக்கப்படும் திடக்கழிவுகளை JCB வாகனம் மூலம் ஒதுக்கி இடவசதி செய்யவேண்டியது அவசியமாக உள்ளதால் மேற்கண்ட பணியினை அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்ட விதி 1920 பிரிவு 15 ன் கீழ் பணியினை செய்தமைக்கும் அதற்குண்டான தொகை ரூ.149310/– ஐ வழங்கியமைக்கும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

12) இந்நகராட்சியின் 2016–17 ம் ஆண்டிற்கான சொத்துவரி கேட்பு,நிலுவை பட்டியலை தணிக்கை துறைக்கு சமர்பிக்க வேண்டி உள்ளதால் அலுவலக ஜெராக்ஸ எந்திரம் பழுதுடைந்தள்ளதால் வெளி கடையில் கொடுத்து (Print) மற்றும் பைண்டிங் செய்தமைக்காகவும் உத்தேச செலவின தொகை ரூ.6000/–ற்கு மன்ற அனுமதி பெற்று வழங்க வரைவு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு** – அனுமதி வழங்கலாம்.

13) இந்நகராட்சிக்கு சொந்தமான ஆணையாளர் பயன்பாட்டில் உள்ள (TN 43 Z 4203) பொலீரோ வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ், பிரேக்பேட், டோர்டிங்கர்ஸ், வீல் அலயன்மென்ட், சேக்ஆப்சர்கள், பம்பர்பேக் டோர் டிங்கரிங், வீல்பேலன்ஸ் மற்றும் பழுதுபணிகள் சரிபார்க்க வேண்டியுள்ளதால் மேற்கண்ட பழுது பணிகளை செய்ய உத்தேச செலவினம் ரூ.10000/— ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

14) இந்நகராட்சியில் நடைபெறும் திட்டப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் மற்றும் விளம்பரங்கள் தினசரி நாளிதழ்களில் வெளியிடுவதற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000/— க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

15) திரு. அவகாசி, ஒப்பந்ததாரர் 01.08.2012 முதல் 22.03.2013 வரை செய்து முடித்த பணிகளுக்கான வைப்பு தொகையினை வழங்குமாறு கேட்டுள்ளார். மேற்கண்ட காலத்திற்கான வைப்பு தொகைகள் காலம் கடந்த வைப்பு பதிவேட்டிற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. எனவே காலம் கடந்த வைப்பு கணக்கில் உள்ள தொகை ரூ.105000/— ஐ திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

| வ. எண். | தேதி | வேலையின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 01.08.2012 | வார்டு எண்.15 ல் ஓடக்கடவு பகுதியில் தடுப்பு சுவர் அமைத்தல் | 5000.00 |
| 2 | 01.08.2012 | ஓடக்கடவி முதல் புத்தூர் கவலா வரை நடைபாதையுடன் கூடிறய தடுப்பு சுவர் அமைத்தல் | 9900.00 |
| 3 | 02.08.2012 | வார்டு எண் 21 ல் வேடன்வயல் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான தண்ணீர் தொட்டி முதல் ராஜ்குமார் வீடு வரை நடைபாதை அமைத்தல் | 5000.00 |
| 4 | 06.09.2012 | வார்டு எண்.8 ல் அமைந்துள்ள நந்தட்டி நடுநிலைப பள்ளியில் கழிப்பிடம் கட்டுதல் | 2000.00 |
| 5 | 18.09.2012 | MR 1201119 | 7000.00 |
| 6 | 18.09.2012 | MR 1201130 | 5000.00 |
| 7 | 11.11.2012 | MR 1201255 | 8000.00 |
| 8 | 25.10.2012 | MR 1201368 | 4000.00 |
| 9 | 25.10.2012 | MR 1201374 | 5000.00 |
| 10 | 26.10.2012 | MR 1201406 | 2500.00 |
| 11 | 20.12.2012 | MR 1202123 | 9800.00 |
| 12 | 12.02.2013 | MR 1202810 | 1500.00 |
| 13 | 20.02.2013 | MR 1203136 | 5000.00 |
| 14 | 20.02.2013 | MR 1203167 | 3300.00 |
| 15 | 21.02.2013 | MR 1203218 | 5000.00 |
| 16 | 09.10.2012 | வார்டு எண்.12 ல் வி.வி.என்.என் நகர் பகுதியில் சாலை அமைத்தல் | 5000.00 |
| 17 | 19.10.2012 | வார்டு எண் 11 ல் எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் நடைபாதை அமைத்தல் | 5000.00 |
| 18 | 25.09.2012 | வார்டு எண் 21 ல் சமுதாய கூடம் அமைத்தல் | 3000.00 |

| | | | |
|---|---|---|---|
| 19 | 31.01.2013 | வார்டு எண் 21 ல் சஜிவன் வீட்டருகில் சிமெண்ட் சாலை மற்றும் தடுப்பு சுவர் அமைத்தல் | 7000.00 |
| 20 | 07.02.2013 | நகராட்சி அலுவலகம் முன்புறம் வடிகால் அமைத்தல் | 2000.00 |
| 21 | 22.3.2013 | வார்டு எண் 21 ல் வேடன்வயல் பகுதியில் நடைபாதையுடன் கூடிய பக்க சுவர் கட்டுதல் | 5000.00 |

16) இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் வாகனம் TN 43 Z **5433** க்கு FC பணிக்காக செலவினம் ரூ.**0.90** இலட்சத்திற்கு இந்நகரமன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி **25.01.2018** ம் நாள் மாலை **3.30** மணிக்கு பெறப்பட்டதின் விபரம்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் வாகனம் TN 43 Z **5433** புதுப்பித்தல் பணி செய்தல் | 0.90 | திருவாளர்கள். பைனீர் ஆட்டோ கேரேஜ் | 0.01 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | | | திருவாளர்கள். கூடலூர் ஆட்டோ கேரேஜ் | 1.95 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலின்படி **0.01** சதவீதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள். பைனீர் ஆட்டோ கேரேஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

ஆணையாளர்
கூடலூர் நகராட்சி(நீலகிரி)